National Shoora Council
NSC
ජාතික උපදේශක සභාව | தேசிய ஆலோசனை சபை | The National Consultative Council
149, Maligakanda Road, Colombo 10 | Mobile: +94-766 270 470 | Tel/ Fax: +94-114 546 546
Emil: nationalshooracouncil@gmail.com | Web: www.nationalshoora.com

---

**தேசிய ஷூரா சபயின் பொதுதுச்செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் அவர்களினால் 20/09/2026 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை**

**சவுதி அரேபியாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை பிரஜை சிவராச அனுஜனுக்காக அரச மன்னிப்பு கோரி சவுதி மன்னருக்கு தேசிய ஷூரா சபை மனிதாபிமான வேண்டுகோள் விடுத்துள்ளது**

இறைத்தூதர் முஹம்மது நபி அவர்களை அவமதிக்கும் வகையில் கருத்துக்களைப் பரப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சவுதி அரேபிய நீதிமன்றத்தால் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 3 மில்லியன் சவுதி ரியால் அபராதமும் விதிக்கப்பட்ட இலங்கை பிரஜை சிவராச அனுஜன் என்பவருக்கு அரச மன்னிப்பும் கருணையும் வழங்குமாறு கோரி, சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் அல் சவுத் அவர்களுக்கு தேசிய ஷூரா சபை சனிக்கிழமை (19/09/2026) அன்று மனிதாபிமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. அனுஜனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மேன்முறையீட்டில் மரண தண்டனையாக உயர்த்தப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

தேசிய ஷூரா சபை என்பது இலங்கையில் உள்ள 14 தேசிய மட்டத்திலான முஸ்லிம் அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும், நாட்டிலேயே உருவான அரசியல் சார்பற்ற ஒரு கூட்டமைப்பு ஆகும்.

சவுதி அரேபியாவின் இறையாண்மை, சட்டங்கள் மற்றும் நீதித்துறையின் நிறுவனங்கள் மீதான தனது மரியாதையை மீள உறுதிப்படுத்தும் அதேவேளையில், நீதித்துறையின் தீர்ப்பை இந்த வேண்டுகோள் எதிர்க்கவோ அல்லது கேள்விக்குள்ளாக்கவோ இல்லை என்பதை NSC தெளிவுபடுத்தியுள்ளது. மாறாக, அனுஜனின் தனிப்பட்ட, பொருளாதார மற்றும் குடும்ப சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளுமாறு வலியுறுத்தி, இது முற்றிலும் மனிதாபிமான அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

NSC இன் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். எம். ஸுஹைர் மற்றும் NSC இன் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான ரஷீத் எம். இம்தியாஸ் ஆகியோரால் கையொப்பமிடப்பட்ட இந்த வேண்டுகோள், சவுதி மன்னரின் அவசரக் பரிசீலனைக்காகப் பின்வரும் முக்கிய மனிதாபிமான காரணங்களை முன்னிலைப்படுத்துகிறது:

- **உண்மையான மனவருத்தமும் மன்னிப்புக் கோருதலும்:** அனுஜன் சமூக ஊடகங்கள் மூலம் தனது ஆழ்ந்த வருத்தத்தையும் உண்மையான மனமாற்றத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளதுடன், மன்னிப்புக் கோரியுள்ளார்; மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உலகளாவிய அங்கீகரிக்கப்பட்ட அந்தஸ்து மற்றும் முஸ்லிம்களின் மத உணர்வுகள் மீது தனக்குள்ள மரியாதையை மீள உறுதிப்படுத்தியுள்ளார்.
- **சம்பவத்தின் பின்னணி:** கிழக்கு இலங்கையில் நடைபெற்ற ஒரு இந்து மத பாதயாத்திரையை தொடர்ந்து சமூக ஊடகங்களில் பரவிய தகவல்களால் திடீரென ஏற்பட்ட உணர்ச்சிவசப்பட்ட எதிர்வினைகளின் மத்தியில்தான் இச்சம்பவம் உருவானது. அனுஜனின் எதிர்வினைகளை நியாயப்படுத்தாவிட்டாலும், இந்த இளைஞரின் பிந்தைய மனவருத்தத்தையும் மன்னிப்புக் கேட்பதையும்கூட மன்னிப்பு வழங்குவதற்கான மிக முக்கியமான தணிப்புக் காரணங்களாகக் கருதி முழுமையான பொதுமன்னிப்பு வழங்குமாறு NSC கேட்டுக்கொண்டுள்ளது.

- ***கடுமையான பொருளாதாரச் சிரமம்:*** *அனுஜன் சவுதி அரேபியாவில் பணிபுரியும் மிதமான வருமானம் கொண்ட ஒரு தொழில்நுட்ப வல்லுநர் ஆவார். அவர் தனது சவுதி வருமானத்திலிருந்து இலங்கையில் உள்ள ஒரு பெரிய குடும்பத்தைத் தாங்கி வருகிறார். அவரது இல்லாமை அவரது குடும்பத்தினருக்கு கடுமையான நிதிச் சுமையை உருவாக்குகிறது, மேலும் அவரிடம் அதிக அபராதத்தைச் செலுத்தும் போதியளவு நிதியில்லாததால், பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக்கூடிய ஒரு குடும்பம் வாழ்வாதாரமின்றி தவிக்கிறது.*
- ***பாதிக்கப்பட்ட வாழ்க்கைத் திட்டங்கள்:*** *அவர் தடுத்து வைக்கப்படுவதற்கு முன்பு,அனுஜன் இந்த ஆண்டின் பிற்பகுதியில் தனது கிராமத்தில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணைத் திருமணம் செய்யத் தயாராகி வந்தார். அவரது தற்போதைய சிறைவாசம் இரு குடும்பங்களுக்கும் ஆழமான நிச்சயமற்ற தன்மையையும் துயரத்தையும் உருவாக்கியுள்ளது.*
- ***இணக்கத்தையும் நல்லெண்ணத்தையும் ஊக்குவித்தல்:*** *இலங்கையின் பல்வேறு பௌத்த, இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையேயான அமைதியான சகவாழ்வை* (coexistence) *அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும் ஒரு அமைப்பாக, ஒரு கருணையான தீர்வு பெரும் நிம்மதியையும், மதங்களுக்கு இடையிலான நல்லிணகத்தையும் வளர்க்கும் என்றும், இலங்கைக்கும் சவுதி அரேபிய இராச்சியத்திற்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்தும் என்றும்* NSC *நம்புகிறது.*

*இந்த வேண்டுகோளின் பிரதிகள் இலங்கை ஜனாதிபதி அனுரா குமார திசாநாயக்க, வெளிநாட்டவலுக்கள் அமைச்சர் விஜித ஹேரத், சவுதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவராலய பொறுப்பதிகாரி திரு. யாசிர் பின் அப்துல் ரஹ்மான் அல்-ஹஸ்மி, இலங்கை பாராளுமன்ற பிரதி சபாநாயகர் Dr. றிஷ்வி சாலி, ஆளுநர் ஹனீப் யூசுப் மற்றும் சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் பிரதி அமைச்சர் அஷ்ஷேய்க் முனீர் முலாப்பர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*